இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka: Tel: 021-222 2378 Fax : 021 222 9041 -E-mail: editorkavalan@gmail.com ISSN 1391-7633

மலர்: 141 இதழ் : 11 திகதி: 25.06.2017 விலை : 20.00

# 13 ஆவது திருத்தச்சட்டத்தில் இருந்து தீர்வு நோக்கிப் பயணிப்போம்

## கர்தினால் மேதகு பேராயர் மல்கம்



இனப்பிரச்சினைத் தீர்வாக உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தில் இருந்து நிரந்த அரசியல் தீர்வு நோக்கிச் செல்ல வேண்டும் என கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார். 1958 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தனிச் சிங்கள சட்டம் இன்று பல பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைந்து விட்டது என்றும் பேராயர் மல்கம் ரஞ்சித் குறிப்பிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் இடம்பெற்ற யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஆண்டகைஅவர்கள் இவ்வாறு கூறினார்.

இல்லாததைப் பற்றிப் பேசுவதை விட இருக்கின்ற விடயம் ஒன்றில் ஆம்பித்து முன்நோக்கிச் செல்ல வேண்டும். சிலர் இல்லாததைப் பேசுகின்றனர். அவை விவாதங்களாகவே அமைந்து விடுகிறது. இல்லாதவை பற்றிப் பேசுவதில் பயனில்லை. ஆகவே இருக்கின்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்வுக்கான வழியைத்தேட முடியும் என்று கர்தினால் சுட்டிக்காட்டினார்.

யுத்தம் கடுமையாக இடம்பெற்றுக் கொண்டிருந்த காலத்தில் யாழ் மாவட்டம் கிளிநொச்சியுடன் துண்டிக்கப்பட்டிருந்த போது கிளாலி கடல் ஏரியா பல சிரமங்கள் மத்தியில் யாழ்ப்பாணத்திற்கு வந்த பயணங்களைக் கர்தினால் ஞாபகமூட்டினார். தமிழர்கள் தங்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகக் கருதும் நிலையை தனிச் சிங்களச் சட்டமே ஏற்படுத்தியது.

அதனால் தான் யுத்தம் ஆரம்பமாகியது என்று கூறிய பேராயர் ஒற்றுமையைக் கட்டியெழுப்பக் கூடிய தீர்வை நோக்கி ஒன்றாகப் பயணிப்போம் என்று வலியுறுத்தினார்.

யாழ் ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையுடன் குருமட காலம் முதல் நல்லுறவில் உள்ளதாகக் கூறிய கர்தினால் அவர்கள் யாழ். ஆயருடன் இணைந்து எம் தேசத்தின் ஒற்றுமைக்காகவும்,

(தொடர்ச்சி 08 ஆம் பக்கம்)

# இணக்கத்தின் தூதுவர்களாக சமயத்தலைவர்கள்- கட்சிமோதலை தவிர்க்குமாறு யோசனை



வடமாகாணசபையில்ஏற்பட்டஉள்ளக முரண்பாடுகளை சமயத் தலைவர்கள் தலையிட்டு சமாதானமான முறையில் இணக்கப்பாட்டை ஏற்படுத் தியுள்ளனர். இனப்பிரச்சினைக்குச் சரியான தீர்வாக மாகாண சபை முறையில்லாத போதும் அந்தமாகாண சபை துரதிஷ்டவசமாக செயற்பட்டு வருகின்றது.

இந்தநிலையில் இரண்டு அமைச்சர் மீது முதலமைச்சர் விக்னேஸ்வரன் மேற்கொண்ட நடவடிக்கையின் எதிரொலியாக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயிடம் சமர்ப்பித்தனர்.

இதனால் தமிழரசுக் கட்சியின் தலைமையுடன் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கருத்து ரீதியாக முரண்பட்டார்.

( தொடர்ச்சி 07 ம் பக்கம்)

# "மக்களின் ஆணையை மீறும் செயல்" யாழ். மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு

கடந்த வாரத்தில் மாகாணசபையில் ஏற்பட்ட அசௌகரிய நிலைமையில் சமாதானத்தை வலியுறுத்தி யாழ். மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு அறிக்கையொன்றை வெளியிட்டது. அவ் அறிக்கையாவது:

வடக்குத் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் முதலமைச்சரான மாண்புமிகுநீதியரசர் சி.வி விக்னேஸ்வரனை மக்களின் ஆணையின்றிப் பதவி விலகச் செய்வது ஒரு ஜனநாயக விரோதச் செயல் என்பதால் இதனை நாம் கண்டிக்கின்றோம். மாகாணசபைத் தேர்தலில் இவரைத்தான் முதல்வராக முன்னிலைப்படுத்தி மக்களிடம்ஆணை பெறப்பட்டது. மக்களும் 1,42,000 க்கு மேலான வாக்குகளைவழங்கி இவரை முதலமைச்சராக்கினார்கள்என்பது குறிப்பிடத்தக்கது. ஊழல் இல்லாத மாகாண சபையையே மக்கள் விரும்புகின்றார்கள். ஊழல்கள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டபோது களையெடுப்பு அவசியமாகின்றது. எனவேதகுந்த நடவடிக்கையாக மதிப்புக்குரிய, நடுநிலைமை வகிக்கக்கூடிய மூவர் அடங்கிய குழுவை முதல்வர் நியமித்தார். விசாரணை அறிக்கையும் வெளிவந்தது. அதில்உள்ளபரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியது முறையான செயல்என்பதைச்சுட்டிக்காட்டவிரும்புகின்றோம். ஊழல்களைவளர்ப்பதற்கு எம்மவரே துணைபோவது ஏமாற்றமளிக்கின்றது.

முதலமைச்சர் தமது அதிகாரவரம்புக்குள் செயல்படுவதைத் தவறு என்று சொல்ல முடியாது என்றும் மாகாண சபை என்ற மட்டில்அதன் முதலமைச்சரே இறுதி முடிவு எடுக்கட்டும் என்றுவிட்டு பின்னர் முதலமைச்சர் எடுத்தமுடிவுகளைத்தடைசெய்வது எமது தலையிலேயே சேற்றைவாரிப் பூசும் செயல்கள் என்றுசுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

( தொடர்ச்சி 08 ம் பக்கம்)

# யாழ். மறைமாவட்டத்தில் முதன் முறையாக இறையியல் பட்டம் பெறும் பொதுநிலைப் பட்டதாரிகள்



யாழ். மறை மாவட்டத்தில் இருந்து பத்து பொது நிலை இறையியல் பட்டதாரிகள் உருவாகியுள்ளனர்

யாழ் மறைமாவட்டத்தில் 2012ம் ஆண்டில் இருந்து புனித யோசவ்வாஸ் தமிழ் இறையியல் கல்லூரி தனது கற்கை நெறியை நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன் முதலாவது அணியினராக 10 மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை நிறைவுசெய்து, 17.06.2017 அன்று மேற்படி கல்லூரி இணைக்கப்பட்டுள்ள கொழும்பு புனித யோசவ்வாஸ் தேவதர்மமிக்க தனயியாவின் 13வது பட்டமளிப்பு விழாவின் போது தமது "கிறிஸ்தவ கற்கைகளுக்கான இளமானிப்பட்டத்தை கொழும்பில் பெற்றுக் கொண்டார்கள் இக்கற்கை நெறியானது உரோமாபுரியில் உள்ள ஊர்பானியா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் இவ் இளமானிப் பட்டம் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது.

# எமது எண்ணம்

## நிதானம் தவறிய அரசியல் செயன்முறை

அரசியல் என்பது மக்கள் வாழ்க்கையில் பின்னிப்பிணைந்தது. அரசியல் தலைவர்கள் மக்களால் உருவாக்கப்பட்டவர்கள். மக்கள் மத்தியில் இருந்தான் வந்தோம் என்ற உணர்வு அவர்களுக்கு இருக்கவேண்டும். மக்கள் அதைத்தான் எதிர் பார்க்கின்றனர்.

தங்களுடைய சுய தேவைகளைப் பூர்த்தி செய்வது, உற்றார் உறவினர்களுக்கு மாத்திரம் அரச நிறுவனங் களில் வேலை எடுத்துக் கொடுப்பது, செல்வாக்கைப் பயன்படுத்தி வேறு உதவிகளை செய்து, தனிப்பட்ட முறையில் தமக்குரிய வாக்குகளை அதிகரிக்கச் செய்வது, ஊழலில் ஈடுபட்டு சொத்து சேர்ப்பது போன்றவை அரசியல் தலைமைக்குரிய பண்புகள் அல்ல.

30 ஆண்டுகள் அஹிம்சைப் போரிலும் அதற்கு அடுத்து 30 ஆண்டுகள் ஆயுதப் போராட்டத்திலும் ஈடுபட்டு ஆயுத போராட்டம் அழிக்கப்பட்ட பின்னரான காலத்தில் மக்களை நிம்மதியாக வாழவைக்க வேண்டிய தலைவர்கள் நம்பிக்கை யீனமான, அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவது கடந்தகால அரசியல் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் செயலாகும்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய விசாரணைக்குழு ஒன்றை அமைத்தார். 13 ஆவது திருத்தச் சட்டத்தின்படி மாகாண முதலமைச்சர் ஒருவருக்கு விசாரணைக்குழு ஒன்றை அமைக்க அதிகாரங்கள் இல்லாத நிலையிலும் தற்துணிவுடன் தன் விசாரணைக்கு உதவியாக அவர் அந்தக் குழுவை அமைத்திருந்தார்.

ஆகவே அவர் தற்துணிவுடன் அமைத்த விசாரணைக்குழு வின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதன்படி செயற்பட்டார். இரண்டு அமைச்சர்களை பதவி விலகுமாறு பணித்தார். விசா ரணை முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத நிலையில் ஏனைய இரண்டு அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணைக்குழு நிரூபிக்கவில்லை. இருந்தாலும் அந்த இரு அமைச்சர்களும் கட்டாய விடுமுறையில் செல்லவேண்டும் என்றும், மேலதிக விசாரணை அந்த இரு அமைச்சர்கள் மீதும் இடம் பெறவுள்ளதாகவும் முதலமைச்சர் அறிவித்திருந்தார்.

அதனை ஏற்றுக்கொள்ளாத தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்தனர். இதே உறுப்பினர்கள் தான் ஒரு அமைச்சர் மீது விசாரணைகோரி மாகாணசபையில் தீர்மானம் நிறை வேற்றியிருந்தனர். அதன் பின்னபே முதலமைச்சர் இந்த விசாரணைக்குழுவை அமைத்திருந்தார். இவ்வாறான முன் னுக்குப் பின் முரணான அரசியல் செயற்பாடுகள் தமிழ் மக்களையும் அவர்களின் அரசியல் அபிலாஷைகளை யும் குழிதோண்டிப் புதைத்துவிட்டது.

முதலமைச்சரை பதவி நீக்க மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சி மாகாணசபை அமைச்சர்களின் ஒரு ஊழல் பிரச்சினை என்பதற்கும் அப்பால், தமிழ் மக்கள் மத்தியிலிருந்து தமிழ ரின் கூட்டுறவுக்கான உரிமை பற்றிப் பேசுவோரை களநீக்கம் செய்யும் தென்னிலங்கை அரச தலைமைகளின் தேவை- களை பூர்த்தி செய்ய மேற்கொள்ளப்பட்டதா என்கின்ற ஐயமும் நிலவுகின்றது.

இந்நிலையில் முதலமைச்சர் நடவடிக்கை ஒன்றை எடுத்தால் அதற்குக் கட்டுப்பட வேண்டியமை உறுப்பினர்களின் பொறுப்பு. ஏனெனில் நம்பிக்கையில்லா பிரேரணையை சமர்ப்பித்த உறுப்பினர்கள் அனைவரும் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள்.

ஆகவே அந்தக் கட்சிசார்ந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத்தான் வடமாகாணசபையில் பெரும்பான்மையாக ஆட்சி புரிகின்றது. இந்த நிலையில் ஒரேகட்சிக்குள் இருந்து கொண்டு தமது முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பித்தமை ஏற்புடையதல்ல. இழுபறி நிலை யின் பின்னர் சமயத் தலைவர்களின் தலையீட்டினால் தற்போது அந்தப் பிரேரணை மீண்டும் வாபஸ் பெறப்பட் டுள்ளது. வடமாகாண சபையின் அரசியல் நாடகம் முடிவுக்கு வந்துவிட்டதாக ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயும் கிண்டலாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார். ஆகவே இவ்வாறான கிண்டல்கள் தமிழ் மக்களை வெட்கமடையச் செய்துள்ளன. பொறுப்பற்ற செயற்பாடுகளே இதற்கெல்லாம் காரணம். அவைத் தலைவர் தனது பதவிக்குரிய கடமையை அறிந்து நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆளுநரிடம் கையளிக்க விடாது பொறுப்போடு செயற்பட்டிருந்தால் இன்று அவர் தமிழர்களின் அரசியலில் உயர்ந்த இடத்தைப் பிடித்தி ருப்பார்? மூத்த அரசியல்வாதி ஏன்நிதானத்தை இழந்தார் என்று தெரியவில்லை.

ஆகவே சாதாரண கட்சி அரசியல் செயற்பாடுகளைத் தவிர்த்து நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும் வரை தேசிய இயக்கம் போன்று அனைத்துத் தமிழ் கட்சிகளும் ஒன்று சேர்ந்து இயங்கவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு. அதை நிறைவேற்றுங்கள்

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

# பருத்தித்துறை மறைக்கோட்டத்தில் யோசவ்வாஸ் கண்காட்சி




கடந்த வாரத்தில் யோசவ் வாஸ் ஆண்டில் புனிதரின் வாழ்வையும் பணியையும் சித்தரிக் கும் வகையில் பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி A.J.யாவிஸ் அடிகளார் மறைக்கோட்ட குருக்களுடன் இணைந்து கண்காட்சியை ஒழுங்கு செய்திருந்தார்.

இக்கண்காட்சியானது மூத்த மறை யாசிரியர் J.M.ஜெயசீலன் அடிகளாரின் நெறியாள்கையில் மறைக்கோட்ட மறையாசி ரியர்கள் இணைந்து நடாத்தினர்.

இக்கண்காட்சியின் இறுதியில் கண் காட்சி அனுபவம் பற்றி சிலரோடு உரையாடிய போது :

செல்வி யாழினி (மறையாசிரியர் தலைவி):-

எமது பங்கில் முதல் முறையாக இக்கண்காட்சியை ஒழுங்கு செய்து நடாத்தி யமை எமக்கும் எமது பங்கிற்கும் பெருமை சேர்க்கின்றது.

செல்வி வினோஜினி :-

புனிதரின் வாழ்வும் பணி யும் பற்றி முதலில் நாங்கள் அறிந்து கொள்ளவும், வாழ்வில் பல பாடங்களைக் கற் றுக்கொள்ளவும் எமக்கு இக் கண்காட்சி வழி கோலியது.

பி.துலக்ஷனா :-

நெடுந்தீவு முதல் பல பங்குகளிலிருந்து இறைமக்கள் பாட சாலை மாணவர்கள் பெரும் எண்ணிக்கை யில் கலந்துகொண் டமை குறிப்பிடத்தக்க விடயம்.

இக்கண்காட்சியினால் இவ்வளவு பயன் கிடைக்குமென நான் ஆரம்பத்தில் உணர வில்லை.

அருட்தந்தை A.J.யாவிஸ்

உண்மையிலேயே எமது மறையாசிரி யர்களைப் பாராட்டி மகிழ்கின்றேன். இக் கண் காட்சியை ஒழுங்கமைக்க முனையும் போது மறையாசிரியர் ஜெயசீலன் அவர்கள் தனது முழுப்பங்களிப்பையும் வழங்கிச் சிறப்பித்தார்.

அதேவேளை, எமது மறையாசிரியர்கள் உணர்வுபூர்வமாக தூய யோசவ்வாஸ் அடிகளா ரின் வாழ்வையும் பணியையும் தாமே கற்றுத் தேர்ந்த விடயங்களை உள்வாங்கிய நிலையில் பார்வையாளர்களுக்கு விளங்கும் வகையில் விளக்கம் கொடுத்தமை அவதானிக்க முடிந்தது. என்னுடைய இம் முயற்சிக்கு எமது மறைக் கோட்ட பங்குத்தந்தையினர் பூரண ஒத்துழைப்பு வழங்கி பங்கு மக்களைக் கண்காட்சியைப் பார்த்துப் பயன்பெற வழி சமைத்தமைக்கு நன்றி கூறுகின்றேன்.

# வழிபாடுகளில் ஒருமைப்பாடே கத்தோலிக்க திருச்சபையின் சிறப்பம்சமாகும்

## யாழ் மறைமாவட்ட குருமுதல்வர்

இளவாலைமறைக்கோட்டப்பொதுநிலையினர் கழகக் கூட்டம் இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் 11.06.2017 அன்றுகாலை 10 மணியளவில் இடம்பெற்றபோது திருவழிபாடு தொடர்பான புதிய ஒழுங்கு முறைகளைத் தெளிவுபடுத்திக் கருத்துத் தெரிவிக்கையிலேயே யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு கலாநிதி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தமது கருத்துரையில் யாழ் மறைமாவட்டத்தில் எல்லா ஆலயங்களிலும் திருவழிபாடுகள் பொதுமைப்படுத்தி (Unifor mity) நடாத்தக்கூடியவகையில் அதற்கான ஒழுங்கு விதிகளை யாழ் மறைமாவட்ட திரு வழிபாட்டு ஆணைக்குழு முன்மொழிந்த தற் கமைவாக இறைமக்கள் அவற்றைப் பின்பற் றிச் செயற்படுத்த வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

வழிபாடுகளில், குறிப்பாகத் திருப்பலி களின் போது பங்குக்குப் பங்கு, ஆலயத்திற்கு ஆலயம் வேறுபாடுகள் இருப்பது தவிர்க்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட குருமுதல் வர், எமது கத்தோலிக்கதிருச்சபையின் சிறப்பே இந்த ஒருமைப்பாடு தான் என்று கூறினார்.

குறிப்பாக திருப்பலி ஒழுங்குமுறைகள் திருப் பலிக்கான ஆயத்தங்கள், பீடஒழுங்கமைப்பு, திருவழிபாட்டு செபங்கள், பாடல்கள், விசேட நாள் திருப்பலி போன்றவற்றை திருச்சபையின் திருவழிபாட்டு ஒழுங்கு முறைகளைப் பின்பற்றி நடைமுறைப் படுத்துவதே சிறந்ததாகும் எனக் குறிப்பிட்டதுடன் இறைவார்த்தைப் பகுதி,நற்கரு ணைப் பகுதி, போன்றவற்றில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளையும் தெளிவு படுத்தினார்.

திருச்சபையின் படிப்பினைகளை உதாசீனம் செய்துசிலர், திருநிலையினர் உட்பட, தன் னிச்சையாகச் செயற்படமுனைவதையும் அவர் சுட்டிக்காட்டி தனது கண்டனத்தையும் தெரிவித்த அதேவேளை, “திருவழிபாட்டுக் கைநூல்” என்ற தலைப்பில் யாழ். மறைமாவட்ட திரு வழிபாட்டு ஆணையத்தினால் அணமையில் வெளியிடப்பட்ட கைநூலைகுருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் படிக்கவேண் டும் என்றும் மேட்டுக்கொண்டார்.

இறைமக்கள் மத்தியில் இக்கைநூலை விநி யோகிக்க பொதுநிலையினர் கழகத்தினர் முயற்சி எடுக்கவேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

இக்கலந்துரையாடல் கருத்தமர்வினை இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. ம. யேசுரட்ணம் அவர்களும், இள வாலை மறைக்கோட்ட பொதுநிலையினர் கழகத்தின் பொறுப்பாளர் இருட்பணி எஸ்.றோய் பேடினன்ற் அவர்களும் இணைந்து ஒழுங்கு செய்தனர்.

# விசுவாசப் பயணத்தில் 175 ஆண்டுகள் நிறைவில் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயம்

175 ஆண்டுகள் சுன்னாக நகர மத்தியில் எழுந்தருளி இருந்து சுன்னாகம் வாழ் மக்களுக்கு பாதுகாவலாக விளங்கும் கோடி அற்புதரான புனித அந்தோனியாரின் திருநாள் திருவிழாவினைக் கொண்டாடும்பங்கு மக்களாகிய நாம் இப்பங்கின் வரலாற்றில் ஒருதிருப்பு முனையாக இவ்வாண்டு அமைகிறது. எமதுபங்குத் தந்தை அருட்பணியோ.ப.ஜோதிநாதன் அடிகளாருடன் இணைந்து நாம் எதிர் பார்த்துக் காத்திருந்த இந்தப் பெரு விழாவில் ஆண்டவர் இயேசுவின் அளவற்ற ஆசீர்வாதம் நிறைந்த ஒரு அருள்பெற்ற ஆண்டாக இந்த ஆண்டு அமைகிறது

இலங்காபுரியில் காலடி எடுத்து வைத்து, விசுவாசசத்தியத்தை, ஆன் மீக வாஞ்சையை வளர்த்தவரான புனித யோசவ்வாஸ் முனிவரின் ஆண்டாகவும், இவ்வருடம் இருப்பது டன் சுன்னாகம் வாழ் கத்தோலிக்க மக்களின் ஆன்மீக ஆணிவேராக அவர்களின் விசுவாச வாழ்வும் அமைந்துள்ளது.

திருநாளின் ஆயத்தநாள்களுக்கு முன்னதாக அருட்பணி ஜெயசீலன் அடிகளார் எமது பங்குத் தந்தையுடன் இணைந்து சிலநாட்களாக ஆன்மீக ஆயத்தங்களைச் செய்து இறைவனின் சித்தம் இனிதே நிறைவேற பங்கு மக்களின் மனம் மகிழ தினமும் செபவழிபாடுகளுடன் புனிதரின் திருச் சொரூபத்தை ஒவ்வொரு வீடுவீடாக வும் எடுத்துச் சென்று வழிபாடுகள் செய்துமுடிக்க உதவினார்.

புனித அந்தோனியாரின் கொடி யேற்றத்துடன் ஆரம்பமான இத்திரு நாள் திருவிழாவின் ஆயத்த நாளன்று அருட்பணி றட்ணராஜா அடிகளார் திருப்பலி நிறைவேற்றினார். அன்றைய தினம் முன்னாள் பங்குத்தந்தை ஜெய சேகரம் அடிகளாரால் "சுன்னைப்பதி யின் காவலனே" என்ற இறுவெட்டும் (CD) வெளியிட்டு வைக்கப்பட்டது. எம்பங்கின் பாடகர்குழாம் பங்கேற்ற இப்பாடல்களில் எம்பங்கைச் சேர்ந்த உடுவில் மகளிர் கல்லூரிசங்கீத ஆசிரியை செல்வி அருளானந்தம் கிளோரா மற்றும் இசையமைப்பாளர் செல்வன் சு.மார்க்கஸ் ஜவர் என்பது குறிப்பிடத் தக்கது.



திருநாள் தினத்திற்கு முன்னைய தினமான நற்கருணை வழிபாடு முடிந்த பிற்பாடு எமது பங்கில் 175வது ஆண்டின் சிறப்பு நிகழ்வாக "ஆன்மீகத்தின் ஆணிவேரும் விழுது களும் விடுதலையை நோக்கி..." என்னும் ஒருசிறப்பு மலரையும் வெளி யிட்டு இருக்கின்றோம். இம்மலரை குருமுதல்வர் அருட்பணி.ப.யோ.ஜெப ரட்ணம் அடிகளார் வெளியிட்டுவைக்க, முதற்பிரதியை இளவாலை மறைக் கோட்ட முதல்வர் அருட்பணி.ம.யேசுரட் ணம் அடிகளார் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்தும் ஆசியுரையை அருட்பணி A.P.தேவசகாயம் அடிகளாரும், ஆய்வு ரையை அருட்பணி. அ.மத்தாயஸ் அடிக ளாரும் வழங்கினர். தொடர்ந்து பிரதி களை எமது பங்குத்தந்தை அருட் பணிJ.B.ஜோதிநாதன் அடிகள், மற்றும் எமது மண்ணின் மைந்தர்கள் அருட் பணி அற்புதராஜா அடிகள், அருட்பணி ஜெறோம் அடிகள், அருட்பணி. A.றொபின்சன் யோசப் அடிகள், அருட் பணி கிறிஸ்ரி அடிகளார் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

யாழ் ஆயர் அவர்களின் வருகையோடு எமது பங்கின் 175 ஆண்டுகள் விசுவாச வாழ்வில் நிலைத்து நின்று எமது மூதாதையர்கள் விதைத்த விசுவாசத்தைக் கட்டிக்காத்து இன்று விழுதுகளாக நிற்கும் நாம் எம் பங்கின் மண்ணின் மைந்தர்களுடன் பங்குமக்களாகியநாம் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

# அமதிபுரத்தில் ஓர் புதிய ஆலயம்



1977 ஆம் ஆண்டு எமது நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் தமிழ் மக்கள் வட பகுதி நோக்கி இடம் பெயர்ந்தனர். இவர்களில் ஒரு பகுதியினர் அருட்தந்தை ஞானப்பிர காசம் அடிகளாரினால் திருமுறிகண்டி யில் இருந்து 7 கிலோ மீற்றர் தூரத் தில் காடு வெட்டி மக்கள் குடியமர்த் தப்பட்டனர். இக் கிராமத்திற்கு அமதி புரம் என்றும் பெயர் சூட்டினார்.

இவருக்குப் பின் ஆன்மீக காரி யங்களிலும் பொருளாதாரத்திலும் அக் கறை காட்டி அருட்தந்தை ஸ்ரனிஸ் லோஸ்பிலிப்ஸ்அ.ம.திஅவர்கள்1983ம் ஆண்டு பணியைப் பொறுப்பேற்று மக் களை இறை விசுவாசத்தில் ஆழமாக்க வும் அன்னை பக்தியை இறை மக்களிடையே பரப்ப வும் 1984ம் ஆண்டு தூய அன்னை வேளாங் கண்ணியின் நாமத் திலே அன்னைக்குஓர் ஆலயம் அமைத்துக் கொடுத்தார்.

இக்கிராமத்தில் வாழ்ந்து வந்த மக்கள் அனைவரும் அன்னை யின் பரிந்துரை யையும் பாதுகாப்பையும் அனுபவித்துக் கொண்டு வாழ்ந்தனர். 2009ம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வின் பின் மக்கள் அகதி முகாமில் இருந்து மீண்டும் தமது சொந்தக் கிராமமாகிய அமதிபுரத்திற்கு மீள்குடியேற்றம் செய் யப்பட்டபோது அன்னையின் ஆலயம் முற்றாகச் சேதமுற்ற நிலையில் காட்சி கொடுத்தது.

ஆயினும் இறை மக்கள் தளராத விசுவாசத்துடனும், நம்பிக்கை யுடனும் இருந்து ஆலயம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்று முழு மூச்சாக உழைத்தனர். 2014ம் ஆண்டு அமதிபுரப்பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்ற அருட்தந்தை யோண் பற்றிக் அ.ம.தி. அவர்கள் அன்னைக்கு ஓர் புதிய ஆலயம் கட்டவேண்டும் என்ற நோக்கில் பல முயற்சிகளை மேற்கொண்டார்.

புதியஆலயம் அமைப்பதற்கு சுவிஸ்லாந்தில் வசிக்கும் திருமதி செபஸ்தியாம்பிள்ளை யசிந்தாவின் உதவியை நாடி 2016 தை மாதம் புதிய ஆலயத்திற்கான அடிக்கல்லை யும் நாட்டினார். இப் புதிய ஆலயமானது 2017 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 7ம் திகதி எமது மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ஜெபரெட்ணம் அடிகளாரினால் ஆசீர் வதித்துத் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாலயம் எமக்குக் கிடைத்தமைக் காக இறைவனுக்கு நன்றி கூறுவது டன் இதனைக் கட்டுவதற்கு நிதியுதவி செய்த திருமதி செபஸ்தியாம்பிள்ளை யசிந்தாவையும் எல்லா வேலைகளை யும் முன்நின்று செய்து முடித்த எமது பங்குத்தந்தையையும் நன்றியோடு நினைத்து வாழ்த்துகின்றோம்.

# ஜீவசாட்சி




மறைந்த அருட்தந்தை சறத்ஜீவனின் நினைவு மலர் வெளியீடு 26 ஆனிமாதம் 2017, திங்கட்கிழமை கலைத்தூது கலையகத்தில் மாலை 3.30 மணிக்கு நடைபெற உள்ளது.

இந் நிகழ்வு அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தின் இயக்குனர் அருட்தந்தை கி.ஜோ.ஜெயக்குமார் அடிகளார் தலைமையில் நடைபெறு கின்றது.


பிரதம விருந்தினராக மதிப்புக்குரிய மேன்மை தங்கிய ஆயர் பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் பங்கு பற்றிச் சிறப்பிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# உடுப்பிட்டி உலக இரட்சகர் ஆலய வருடாந்தப் பெருவிழா

உடுப்பிட்டி உலக இரட்சகர் ஆலயப் பெருவிழாவானது, ஆனி 2ம் திகதி முதல் 09 ஆம் திகதி வரை நடைபெறும்

08 ஆம் திகதி நற்கருணை வழிபாடும், 09ம் திகதி திருநாட் திருப்பலி காலை 6.30 மணிக்கு நடைபெறுமென பங்குத்தந்தை அருட் திரு எம்.கான்ஸ்போவர் அடிகளார் பாதுகாவலனுக்குத் தெரிவித்தார்.

# திருத்தந்தையின்



## மறையுரையிலிருந்து....

இவ்வுலகின் தவறான கொள்கைகளுக்கு எதிர் சாட்சிகளாக ஒவ்வொரு நாள் வாழ்க்கையையும் மேற்கொள்ளும் சாட்சிய வாழ்வே இன்றைய திரு அவையில் மிக அதிகமாகத் தேவைப்படுகிறது.

குழந்தைகள் வேண்டாம் என்று கூறி வந்த ஐரோப்பிய கலாசாரம் இப்போது புலம்பெயர்ந்தோரும் வேண்டாம் என்று தன் கதவுகளை மூடிக்கொண்டால் அது அச்சமுதாயம் எடுக்கும் தற்கொலை முடிவாக அமையும்.

"நீ", "நான்" என்ற தனிப்பட்டவர்கள் இணைந்தால், அங்கு உருவாகும் "நாம்" என்ற உணர்வு, இவ்வுலகில் ஒரு புரட்சியை குறிப்பாக, பரிவை அடிப்படையாகக் கொண்ட ஒரு புரட்சியை உருவாக்க முடியும்.

நம் நம்பிக்கை, பிறரன்பிலும், இரக்கத்திலும் நம்மை வளர்க்க வேண்டும். அயலவரை மன்னிப்பதற்கும், தேவையில் இருப்போருக்கு உதவிகள் செய்வதற்கும் நம் நம்பிக்கை நம்மை உத்தித் தள்ளவேண்டும்.

எத்தகைய துன்பத்திலும் இயேசுவுக்கு ஆற்றும் பணியில் மகிழ்ச்சியைக் காண்போம். இரட்டை வாழ்க்கை என்பது ஒரு மிகப் பெரிய கொடிய நோயாகும்.

இறைவார்த்தையை வாசித்துத் தியானிக்கும் ஒவ்வொரு அருட்பணியாளரும், தான் வாசித்தவற்றை நம்பவும், நம்பிக்கையின் வழியாகத் தான் கற்றவற்றைப் பிறருக்கு கற்பிக்கவும், தான் கற்பித்தவற்றை வாழ்ந்து காட்டவும் முன்வர வேண்டும்.

அருட்பணியாளர் வழங்கும் மறையுரைகள், கல்வியறிவில் மேம்பட்டதாகவோ, விளக்கம் நிறைந்ததாகவோ இருக்கத் தேவையில்லை. அவை எளிமையாக இருக்க வேண்டும் என்பதே முக்கியம்.

ஒருமைப்பாடும் பகிர்ந்து வாழும் பண்புகளும் அதிகரிப்பதற்கு ஒன்றிணைந்து உழைப்போம். நல்லதொரு அமைதி நிறைந்த சமூகங்களை அமைப்பதற்கு ஒத்துழைப்பு உதவும்.

கடந்தகால நிகழ்வுகளிலே நிலைத்திராமல், அந்நிகழ்வுகளில் நம்பிக்கைக்கு வழங்கப்பட்ட மாபெரும் சான்றுகளை, இக்காலத்திய நற்செய்திப் பணிகளுக்கு எடுத்துக்காட்டாகப் பின்பற்றி வாழ்வோம்.

உயிர்த்த இயேசு, ஒவ்வொரு காலத்திலும், அயர்வின்றி நம்மைத் தேடுகிறார். இந்த உலகின் பாலை நிலங்களில் அலைந்து கொண்டிருக்கும், அவரின் சகோதர, சகோதரிகளைத் தேடுகிறார்.

உலகின் வளங்களைப் பகிர்வதால் மட்டும் நீதி நிறைவு பெறுவதில்லை. மாறாக அந்த வளங்களை உருவாக்குதல், அவற்றைப் பயன்படுத்துதல் என்ற ஆரம்ப நிலையிலிருந்தே நீதி பின்பற்றப்பட வேண்டும்.

இறைவார்த்தையை ஏற்பதற்கு முதலில் பணிவு தேவை. இரண்டாவது, அதை அறிவதற்கு "என் ஆடுகள் என் குரலை அறிந்திருக்கின்றன" என்றுரைத்த இயேசுவை அறிந்திருக்க வேண்டும். மூன்றாவதாக அதைப் புரிந்து கொள்ள நம் இதயங்களைத் தூய ஆவியாருக்குத் திறந்து வைக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் சமுதாயத்திற்குக் கொடுப்பதற்கு ஏதாவது ஒன்றை வைத்துள்ளனர். அனைவரின் நலனுக்காக வழங்குவதிலிருந்து யாருமே ஒதுக்கப்படுவதில்லை.

புறப்பட்டுச் செல்லுதல், கவலைகளுக்குச் செவிமடுத்தல், மகிழ்வோடு திரும்புதல் ஆகியவை திரு அவைக்கே உரிய செயற்பாடுகள்.

பாடசாலை, குடும்பம், சமுதாயம் இவற்றுக்கு இடையே உடன்பாட்டை உருவாக்க வேண்டும். ஒவ்வொருவரும் சிறுவர் சிறுமியரின் வாழ்வில் அக்கறை காட்டும்போது அவர்கள் வளர்வார்கள்.

வாழ்க்கைப் பாதையில் முன்னோக்கிய பார்வையை வளர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம், மேலும் சமுதாயத்தின் விளிம்புகளைத் தேடிச் செல்ல வேண்டும்.

அணு ஆயுதப் போர் ஒன்று உருவாகும் அளவு இன்றைய உலகில் மோதல்கள் எழுந்துள்ள வேளையில், ஐ.நா. அவைத் தலைவர்கள் உறுதியான தலைமைப் பொறுப்பை ஏற்று, உரையாடலின் மூலம் அமைதியை உருவாக்க முயல வேண்டும்.



# திரு அவைச் செய்திகள்

இன்றைய உலகில் நிலவும் சூழல், இளையோர் மீது நம் கவனத்தை மிக ஆழமாக திருப்புகிறது என்றும், நல்லதொரு எதிர்காலத்தைக் குறித்து இளையோர் கொண்டுள்ள நம்பிக்கையற்ற மனநிலை, அவர்களைச் செயலற்றவர்களாக மாற்றிவிடும் ஆபத்து உள்ளது என்றும் வத்திக்கான் செயலர் கர்தினால் பியெத்ரோ பரொலின் கூறினார்.

வெனிசுவேலா நாட்டில் நிகழும் அநீதிகளுக்கு , நற்செய்தி வழியில், மக்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என்றும், எதிர்ப்பை வெளிப்படுத்தும் போராட்டம் இன்றி, நம்பிக்கை இல்லை என்றும், அந்நாட்டு ஆயர் பேரவைத் தலைவர், ஆயர் தியேகோ பாத்ரோன் அழைப்பு விடுத்துள்ளார்

புனித பாத்ரே பியோ அவர்களின் திருப்பண்டங்கள் அடங்கிய பேழை, மே மாதம் 6 முதல் அக்டோபர் 1ம் திகதி முடிய, அமெரிக்க ஐக்கிய நாட்டின் பல்வேறு மறைமாவட்டங்களில் பவனியாக எடுத்துச்செல்லப்படுகின்றன, புனித பியோ அவர்கள் பிறந்ததன் 130 ஆண்டையும், அவர் புனிதராக உயர்த்தப்பட்டதன் 15ம் ஆண்டையும் சிறப்பிக்கும் வகையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது

குடியேற்றதாரர் மற்றும் புலம்பெயர்ந்தோர் குறித்து அமைக்கப்படும் உலகளாவிய ஒப்பந்தங்கள், உலகளாவிய மனித உரிமைகள் அறிக்கையில் இடம்பெற்றுள்ள மானுடத்தின் பொதுவான விழுமியங்களால் வழிநடத்தப்படுவதாய் இருக்க வேண்டும் என ஜெனீவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா.கூட்டத்தில் உரையாற்றிய வத்திக்கான் அதிகாரி பேராயர் இவான் யூர்க்கோவிச் கேட்டுக் கொண்டார்

அறிவியலும், மதமும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல, ஆனால், விண்வெளியின் புதிரானவைகளை வெளிப்படுத்துவதில் இடம்பெறும் தொடர் தேடுதலில் இவையிரண்டும் ஒன்றிணைந்துள்ளன என வத்திக்கான் வானியல் ஆய்வு மைய இயக்குனர் இயேசு சபை அருட்சகோதரர் கய் கொன்சால்மக்னோ கூறினார்

அணு ஆயுதங்களிலிருந்து முற்றிலும் விடுதலை பெற்ற ஓர் உலகை உருவாக்க, வத்திக்கான் தனது முழு ஆதரவை அளிப்பதோடு, அதற்காக முழு வீச்சுடன் உழைக்கவும் தயாராக உள்ளது என்று அணு ஆயுதங்களைக் கட்டுப்படுத்தும் ஒப்பந்தம் குறித்து வியன்னாவில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையில் வத்திக்கான் உயர் அதிகாரி அருட்பணி ஜானுசஸ் அர்பன்சிஸாக் கூறினார்.

மியான்மாரின் ஐந்து கோடியே பத்து இலட்சம் மக்களில், ஏறக்குறைய ஒரு விழுக்காட்டினரே கத்தோலிக்கர்கள், ஆயினும் அந்நாட்டில் ஐந்து நூற்றாண்டுகளாக திரு அவை செயல்பட்டு வருகிறது. 2011ம் ஆண்டில் 500ம் ஆண்டு நிறைவு சிறப்பிக்கப்பட்டது

பல்லாயிரக்கணக்கான பெண்களும் சிறுவர்களும் பங்களாதேஷ் நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வர்த்தகம் செய்யப்படுவதாக அறிக்கைகள் வெளிவந்துள்ள வேளையில், இவ்விரு நாடுகளின் கத்தோலிக்கத் திரு அவைப் பணியாளர்கள் இணைந்து மனித வர்த்தகத்திற்கெதிராய் உழைப்பதற்குத் தீர்மானித்துள்ளனர்

போதைப்பொருளுக்கு எதிராக பிலிப்பின்ஸ் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன என்பது குறித்து உலகுக்கு வெளிப்படுத்திய கத்தோலிக்கக் குழுக்களுக்கு அந்நாட்டின் மனித உரிமைகள் அமைப்பு பாராட்டுத் தெரிவித்துள்ளது

பாகிஸ்தானில் அமைதி, சமயம் மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதன் அடையாளமாக, நாடெங்கும் ஒலிவ மரங்களை நடுவதற்கு கிறிஸ்தவர்களும் முஸ்லீம்களும் தீர்மானித்துள்ளனர்

பூர்வகுடி மக்களின் உண்மையான வளர்ச்சியில், குறிப்பாக அவர்களின் பொருளாதார வளர்ச்சியோடு கலாசார மற்றும் சமூக வளர்ச்சியும் ஊக்குவிக்கப்பட வேண்டுமென்று உலக அரசுகளை வத்திக்கான் கேட்டுக்கொண்டுள்ளது

உலகளவில் கிறிஸ்தவர்களுக்கெதிரான சமயரீதியிலான அடக்குமுறை அதிகரித்துவரும் வேளை, கிறிஸ்தவ சபைகள் அனைத்தும் துன்புறும் கிறிஸ்தவர்களுடன் ஒருமைப்பாடுணர்வு காட்ட வேண்டியது மிகவும் இன்றியமையாதது என அமெரிக்க ஐக்கிய நாட்டு திருஅவை அதிகாரி கர்தினால் டானல் டவூரல் கூறினார்

இலங்கை நாட்டின் மன்னார் பகுதியில், தமிழர்களுக்குச் சொந்தமான இடங்கள் அவர்களுக்கு மீண்டும் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரசு அதிகாரிகளிடம் மன்னார் ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை ஒப்படைத்தார் 2009ம் ஆண்டு இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பின், முள்ளிக்குளம் பகுதியில் கடற் படையினர் மேற்கொண்ட ஆக்கிரமிப்பால் பல நூறு தமிழ் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன

அணுசக்தி இல்லாத ஒரு நாடாக தென்கொரியாவை அமைப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்கு கொரிய கத்தோலிக்க ஆயர் பேரவை தனது ஆதரவை வழங்கியுள்ளது.

# மானிப்பாய் பங்கின் மகா ஞானொடுக்கம்

மானிப்பாய் பங்கில் பங்குத் தந்தை அருட்பணி S.J.Q.ஜெயறஞ்சன் அடிகளாரின் ஏற்பாட்டில் மகா ஞானொடுக்கமானது 2017.04.30 அன்று அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த குருக்களால் ஞாயிறு காலைத் திருப்பலியுடன் மகா ஞானொடுக்கக் கொடி மற்றும் பங்குக் கொடி ஏற்றி வைக்கப்பட்டு இனிதே ஆரம்பிக்கப்பட்டது.

கிட்டத்தட்ட 25 ஆண்டுகளுக்குப் பின்னர் மானிப்பாய் புனித அன்னாள் ஆலயம், புனித அந்தோனியார் ஆலயம், புதுமடம் கர்த்தர் ஆலயம், கட்டுடை மடுமாதா ஆலயம், ஆலடி புனித சூசையப்பர் ஆலயம், மற்றும் சுதுமலை புனித யூதாததேயு ஆலயம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கி ஆன்மீகத்தில் வலுவூட்டச் செய்யும் இச் செயற்பாடு எம் பங்கிற்குக் கிடைத்த மாபெரும் வரப்பிரசாதம் என்றே கூறிக் கொள்ளவேண்டும்.

பங்குத்தந்தை ஜெயறஞ்சன் அடிகள் அவர்களால் பங்கு ஆன்மீகச் செயற்பாடுகள் முழுவதும் கையளிக்கும் அடையாளமாக திருவிவிலியமும், நற்கருணைப் பேழைத் திறப்பும் மானிப்பாய் பங்கு மகா ஞானொடுக்க முதல்வர் அருட்தந்தை பற்றிக் பிரசாந் (அ.ம.தி) அடிகளாரிடம் கையளிக்கப்பட்டு "புதிதாய் வாழ்வோம்" என்னும் தொனிப்பொருளில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

01.05.2017 ஆலடி புனித சூசையப்பர் ஆலயத் திருவிழா இடம்பெற்று 02.05.2017 அன்று காலை 9.00 மணியளவில் இல்லத்தரிசிப்புக்களும் மாலை 6.00 மணியளவில் வலயத் திருப்பலியுடன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

06.05.2017 சனி காலை 9.00மணியளவில்சகோ.ஜெனிஸ்ரன் (அ.ம.தி) தலைமையில் சிறுவர்களுக்கான கருத்தமர்வு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து 07.05.2017 ஞாயிறு காலை 9 மணி முதல் மதியம் 12.00 மணிவரை அருட்தந்தை பிலிப் (அ.ம.தி) அடிகளார் தலைமையில் இளையோருக்கான கருத்தமர்வு இடம்பெற்றது.

மாறும் சமுதாயத்தில் மாற்றங்களை உள்வாங்கி சவால்களை எதிர்கொண்டு மனித நேயமுள்ள இளையோர் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்குரிய சீரிய பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தமை எம்இளையோர், யுவதிகளுக்குப்புத்துணர்ச்சியை அளித்தது.

தொடர்ந்து வழமை போன்று இல்லத் தரிசிப்புக்களும், வலயத் திருப்பலிகளும் இடம்பெற்றது. 13.05.2017 சனி காலை 9.00 மணியளவில் அருட்தந்தை ஜஸ்ரின் (அ.ம.தி) அடிகளார் தலைமையிலும் அருட்சகோதரர்கள் வழிகாட்டலிலும் "அழைத்தல்" கருத்தமர்வு இடம்பெற்றது.

இக் கருத்தரங்கு வழிகாட்டலுக்குப் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆர்வமுள்ளோர் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் அருட்சகோதரர்களால் துறவறம் சார் அனுபவப் பகிர்வானது மேற்கொள்ளப்பட்டது.

14.05.2017 ஞாயிறு மாலை 3.00 மணியளவில் குடும்பங்களுக்கான கருத்தமர்வு அருட்தந்தை ஸ்ரனி அன்ரனி (அ.ம.தி) அவர்களால் முன்னெடுக்கப்பட்டது. வலயத் திருப்பலி நேரங்களில் அனைத்து வலயங்களிலும் குறித்த ஒரு நாளில் பிரத்தியேகமான ஓரிடத்தில் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு ஒப்புரவு அருட்சாதனமும்வழங்கப்பட்டது. அனைத்து மக்களும் ஆர்வமுடன் திருப்பலிகளில் பங்குபற்றியமை பெருமகிழ்வைத் தருவது மட்டுமல்லாது, முதியோர், நோயாளிகள், இயலாதோர்கள் அனைவரும் இறை ஆசீர்பெற முடிந்தமை இறைவனின் அருள் என்றே கூறிக் கொள்ள முடியும்.

இதுமட்டுமன்றி 3 வலயங்கள், 1 வலயமாகக் கொண்டு ஓர் பொது இடத்தில் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து அன்பியப் பகிர்வை மேற்கொண்டிருந்தனர். இந்நாள் எல்லோருக்கும் மறக்கமுடியாத நாளாக மாலைத் திருப்பலியைத் தொடர்ந்து பொது உணவைப் பகிர்ந்து உண்டனர்.

மகாஞானொடுக்கச் செயற்பாட்டின் முக்கிய ஆன்மீகச் செயற்பாடாக மாதா திருப்பவனி-18.05.2017 அன்று கட்டுடை மடுமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருச்சொரூபம் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் வைத்து செபத்துடன் மக்கள் பயணித்தனர். பிப்பிலிச்சந்தியில், பவனியின் முதல் தரிப்பிடத்தில் அருட்தந்தை லூயிஸ் பொன்னையா (அ.ம.தி) அடிகளாரால் மறையுரை ஆற்றப்பட்டது. தொடர்ந்தும் பவனி மானிப்பாய்ச் சந்தி ஊடாக புனித அந்தோனியார் ஆலயத்தை வந்தடைந்ததும் அருட்தந்தை ஸ்ரனி அன்ரனி (அ.ம.தி) அவர்களால் மறையுரை ஆற்றப்பட்டது. தொடர்ந்து திருப்பவனி புனித அன்னாள் ஆலயம் வந்தடைந்தது. அருட்தந்தை போல் நட்சத்திரம் (அ.ம.தி) அடிகளால் நிறைவு மறையுரை ஆற்றப்பட்டு நிறைவுச் செபத்துடன் திருச்சொரூப ஆசீர்வாதம் இடம்பெற்றது.

மானிப்பாய் பங்கின் மகா ஞானொடுக்கம் பல வழிகளில் கடந்து வந்த பாதையை மீள ஆராய்ந்து பார்க்கவும், இன்னும் அதிகமாக ஆன்மீகத்தில் வலுவூட்டம் பெறவும் துணை நின்றது. பகிர்வு, ஈடுபாட்டுடன் செயற்படும் திறன், எதிர்நோக்கும் பிரச்சினைகளில் திறமையாக முகம் கொடுக்கும் ஆற்றல் அனைவரிலும் வளரச் செய்யவும் துணை நின்றது.

குறிப்பாக எம் பங்கு வாழ் இளையோர், யுவதிகள் அதிக அக்கறையுடனும் பொறுப்புணர்வுடனும் ஆலயச் செயற்பாடுகளில் ஈடுபடுவது இறைவனுக்கு மகிமை சேர்ப்பதாக அமையும்.

மகா ஞானொடுக்க நிறைவுத் திருப்பலி 31.05.2017 அன்று மாலை 5.30 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் அருட்தந்தை மரிய செபஸ்ரியன் அடிகளாரின் தலைமையிலான கூட்டுத் திருப்பலியோடும், மகா ஞானொடுக்கத் திருச்சிலுவை ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டதோடும் இப்புதுப்பித்தல் நிகழ்வு நிறைவுக்கு வந்தது.

மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தின் 1,2,3ம் வலயங்களுக்கு அருட்தந்தை பற்றிக் பிரசாந் (அ.ம.தி), 4,5,6ம் வலயங்களுக்கு அருட்தந்தை டிலோசன் (அ.ம.தி), 7,8,9ம் வலயங்களுக்கு அருட்தந்தை ஜஸ்ரின் (அ.ம.தி) ஆகியோர் பொறுப்பாய் இருந்தனர். புனித அந்தோனியார் ஆலயத்தைச் சூழவுள்ள மானிப்பாய் நகரப் பகுதிக்கு மறையுரைஞர் குழுமத் தலைவர் அருட்தந்தை அந்தோனிமுத்து (அ.ம.தி) பொறுப்பாய் இருந்தார். புதுமடம் கர்த்தர் ஆலயத்திற்கு அருட்தந்தை யூஜின் அமலராஜ் (அ.ம.தி), கட்டுடை மடுமாதா ஆலயத்திற்கு அருட்தந்தை யேசுபாலன் (அ.ம.தி), ஆலடி புனித சூசையப்பர் ஆலயத்திற்கு அருட்தந்தை றொக்சன் குரூஸ் (அ.ம.தி) பொறுப்பாய் இருந்து பணியாற்றினர். இவர்களுக்கும் இவர்களின் பணிக்கு உறுதுணையாயிருந்த அருட்சகோதரர்களுக்கும் எம் நெஞ்சார்ந்த நன்றிகள் உரித்தாகுக.



## யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் தினம் - 2017
## மறைமாவட்ட மட்ட போட்டி முடிவுகள்

| பெயர் | பங்கு | பிரிவு | இடம் |
|---|---|---|---|
| டெனி கொன்ஸ்ரன்ரைன் லொகான் ஸ்ரென்விக் | திருநெல்வேலி | 1 | 1ம் இடம் |
| கெயின் சாள்ஸ் ஹேட்றியன் | புனித ஆசீர்வாதப்பர் (நல்லூர்) | 1 | 2ம் இடம் |
| லெனின் கனிமொழி | இளவாலை | 1 | 3ம் இடம் |
| அன்ரனி சாள்ஸ் மற்றில்டா | ஆனைக்கோட்டை | 2 | 1ம் இடம் |
| கிறிஸ்தோப்பர் கிறிஸ்ரினா ஜென்ஸி | மணியந்தோட்டம் | 2 | 2ம் இடம் |
| நோ. துஷாளின் | சில்லாலை | 2 | 3ம் இடம் |
| பீற்றர் ஜெயசீலன் ஜோதினி | பருத்தித்துறை | 3 | 1ம் இடம் |
| தெட்சணாமூர்த்தி யதுஸியன் | கூழாமுறிப்பு | 3 | 2ம் இடம் |
| டிசாந்தினி மெலானியஸ் | மண்டைதீவு | 3 | 3ம் இடம் |

# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை

## பின்னணி, தோற்றம், வளர்ச்சி



### வடக்கு (யாழ்ப்பாண) அப்போஸ்தலிக்க மாவட்டத்திற்கும், தெற்கு (கொழும்பு) அப்போஸ்தலிக்க மாவட்டத்திற்குமிடையே இருந்த எல்லை பிரிப்புப் பிரச்சினை.

- அருட்பணி S.V.B.மங்களராஜா -

பின்னர் 1840ம் ஆண்டு பேட்றோ நொறோன்கா (Pedro Noronha) இவ்வாலயக்கட்டுமானப் பணியைத் தொடர்ந்து பொறுப்பெடுக்க அனுப்பப்பட்டார். எனவே இவ்வாலயத்திற்கான உரிமையைஒரட்டோரியன்சபையினர் கோரியமை புரிந்துகொள்ளக்கூடிய தொன்றே. மறுபக்கத்தில் ஆயர் பெற்றக் கீனியும் யாழ். அப்போஸ்தலிக்க மாவட்டத்தின் (வடக்கு) மற்றக்குருக்களும் தீவின் சிவில் பிரிவுகளாகிய 6 மாகாணப் பிரிவுகளின் அடிப்படையில் வடக்கு, தெற்கு பிரிக்கப்படவேண்டும் என்று கோரினர்.

அதன்படி தெற்கு, தென் மேற்கு, மத்திய மாகாணங்கள் தெற்கு அப்போஸ்தலிக்க மாவட்டமாகவும், வடக்கு, வடமேற்கு, கிழக்கு மாகாணங்கள் வடக்கு அப்போஸ்தலிக்க மாவட்டமாகவும் அமைந்திருக்கக்கோரினர். இருபகுதியினரும் உரோமை விசுவாசப் பரப்புதல் சபைக்குத் தமது விண்ணப்பங்களை, விளக்கக்கடிதங்களையும் அனுப்பிவைத்தனர். செமேரியா அ.ம.தி. அடிகளின் கடிதங்களை உரோமைக்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டமையால் ஆயர் புனித யூஜின் டிமசனட் அவர்களும் இந்த வடக்குத் தெற்கு அப்போஸ்தலிக்க மாவட்ட நிர்ணயப்பிரச்சினைக்குள் ஈடுபட வேண்டியேற்பட்டது.

1853ம் ஆண்டு மே மாதம் உரோமை விசுவாசப்பரப்புதல் சபை ஆயர் பெற்றக் கீனியவர்களுக்கு அனுப்பி வைத்த கடிதம் அவருக்குத்திருப்தியளிக்கவில்லை.




அதன்படி சிலாபத்தை தெற்கு அப்போஸ்தலிக்க மாவட்டத்திற்கு வழங்கும்படி அவர் பணிக்கப்பட்டிருந்தார். அதனைவிட அவருக்கு அதிர்ச்சியளித்த விடயம் தலைவில்லு புனித அன்னாள் ஆலய வருமானத்தில் 1/3 பகுதியை தெற்கிற்கு வழங்கும்படியும் பணிக்கப்பட்டமையாகும்.

இதற்குப் பதிலளிக்கு முகமாக வடக்கு அப்போஸ்தலிக்க மாவட்டத்தில் கத்தோலிக்கரின் எண்ணிக்கையிலும் (12,000 கத்தோலிக்கர்கள் இங்கிருந்தனர்) நிதிநிலவரத்திலும் சிறப்பான நிலையிலிருந்த சிலாப மறைத்தளத்தை வடக்குடனேயே வைத்திருக்க வேண்




டிய காரணங்களை விளக்கி ஆயர் பெற்றக்கீனியவர்களும், செமேரியா அ.ம.தி அடிகளும் விசுவாசப்பரப்புதல் சபையின் இயக்குனராகிய கருதினால் பிரன்சோனிக்கு (CardinalFranzoni) கடிதமெழுதினர். இக்கடிதத்தில் இவர்கள் விளக்க விரும்பியது என்னவெனில் தெற்கு அப்போஸ்தலிக்க மாவட்டம் வடக்கு அப்போஸ்தலிக்க மாவட்டத்திலும் பார்க்கப் பொருளாதாரத்தில் சிறப்பான நிலையிலிருந்தது. அத்துடன் அறைவீடுகள் ஒரு புறமிருக்க நன்கு கட்டப்பட்ட உருப்படியான கோவில்கள் என்று பார்க்கும்போது வடக்கில் இரண்டு ஆலயங்கள் மட்டுமே அவ்வாறு உள்ளன என்றும் குறிப்பிட்டனர்.

இரு அப்போஸ்தலிக்க மாவட்டங்களின் எல்லைப் பிரச்சினை மிகவும் முக்கியமானதாக ஆயர் பெற்றக்கீனிக்குப்பட்டதனால் உரோமைப்பயணத்திற்கு உத்தரவு பெறமுன்னரே ஆயர் பெற்றக் கீனி அங்கு பயணமானார். 1853ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இரு உப தேசிமார் (மறையாசிரியர்கள்) பிரான்சிஸ் சவிரிமுத்து, பிரான்சிஸ் வடூலீசன் (Francis Vadoolisan ஆகியோருடனும் (இவ்விருவரும் 1857ம் ஆண்டு குருவாக ஆயர் பெற்றக்கீனியால் திருநிலைப்படுத்தப்பட்டனர்.) காசிநெல்லி அடிகளாருடனும் ரோமை வந்திறங்கினார்.

ஆயர் பெற்றக்கீனி உரோமாபுரியில் இருந்த வேளையில் இந்தியாவின் பாண்டிச்சேரியின் அப்போஸ்தலிக்க முதல்வராக இருந்த ஆயர் பொணாண்ட் (Bonnand) ஆண்டகையை இலங்கையில் வடக்குத்தெற்கு அப்போஸ்தலிக்க ஆட்சிப்பிரிவுகளின் எல்லைப்பிரச்சினையைத் தீர்க்க மத்தியஸ்தம் வகிக்கும்படி விசுவாசம் பரப்புதல் சபை கேட்டுக் கொண்டது. (தொடரும்.....)

---

# யாழ். மறைமாவட்டத் திருச்சபைக்காக மன்றாடுவேம்

இறைவனின் மகிமைக்காகவும் இறையரசின் வளர்ச்சிக்காகவும் வாழும் இறைமக்கள் குழுமத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் தன் வீட்டுக்காகவும் நாட்டுக்காகவும் பங்கிற்காகவும் அகில உலகத் திருச்சபைக்காகவும் ஒவ்வொரு நாளும் மன்றாடவேண்டியது உன்னதமான கடமையாகும். அது போல் எமது பழம் பெருமை மிகு மறை மாவட்டத் திருச்சபையின் ஒவ்வொரு அங்கத்தவருக்காகவும் இறைவனிடம் கையேந்தி வேண்டுவது நம் எல்லோரினதும் பிறரன்புடன் கூடிய பொறுப்புமாகும்.

இறைவன் தான் விரும்பியவாறே அனைத்தையும் நெறிப்படுத்துகின்றார். அனைவரையும் தனது நன்மையை, முழுமையை, நிறையுண்மையை நோக்கி வழிநடத்துகின்றார். யார் யார் எங்கே எப்போது பிறக்கவேண்டும். எங்கே எப்போது எப்படி வாழவேண்டும். எங்கே எக்காலத்தில் எப்பணியைச் செய்யவேண்டும் என்பது இறைவனின் சித்தம். எனவே அவரது விருப்பத்திற்கெதிராக நாம் ஒருபோதும் எமது சுதந்திரத்தைப் பயன்படுத்தக்கூடாது. ஏனெனில் எமது மறைமாவட்டத்தை இறைவன் நிறைவாக ஆசீர்வதித்திருக்கின்றார். எவ்வாறெனில் போர்த்துக்கேய ஐரோப்பிய மறையறிவிப்பாளர்களின் தியாகங்களால் கத்தோலிக்க மறையுண்மைகளை உள்வாங்கி வாழ்ந்துகொண்டிருந்த எம்முன்னோரின் நம்பிக்கை அணையாது காக்கப்படுவதற்காகப் பொருத்தமான காலத்தில் உருக்கொடுத்த உத்தமராக, தன்னந்தனியனாக வந்து 24 வருடங்கள் கால் நடையாகப் பணி செய்த எம் தாய்த் திருநாட்டின் புனிதர் யோசவ் வாஸின் கால்பட்ட மண்ணிது. அமலமரித் தியாகிகளினதும் போடோ திருக்குடும்பச் சபையினரினதும் ஆயர்கள், குருக்கள், ஆண், பெண் துறவியரின் அதாவது இம்மண்ணோடு உரமாகிவிட்டவர்களின் சொல், செயல், சிந்தனையால் வளம் பெற்ற மண்ணிது. தாதியப் பணியாற்றிய அருட்சகோதரிகளும் பொஞ்சீன் அடிகளால் தொடங்கப்பட்ட சுதேச துறவற சூசையப்பர் சபையினரும் யாழ். மண்ணிலிருந்து வெளியேற்றப்படமுன்பு ஆற்றிய பணிகள் ஏராளம். பல்வேறு கிறிஸ்தவ சபைகளின் எழுத்துப்போர்கள் மத்தியில் ஆயர் பொஞ்சீனால் திரு. யோசவ் அன்றுவின்முயற்சியால்தொடங்கப்பட்ட புனித வளன் கத்தோலிக்க அச்சகமும் நல்லூர் சுவாமிஞானப்பிரகாசரின் புலமையை ஆசிரியத்துவமாகக் கொண்ட பாதுகாவலன் பத்திரிகையும் ஆற்றிய சேவை மகத்தானது.

கியோமர் ஆண்டகையின் வழிகாட்டலில் தவத்திரு. தோமஸ் அடிகள் தனது இயலாமையிலும் ஆரம்பித்து இன்று கிளைகள்பரப்பி விருட்சமாகி நிற்கும் செபமாலைத் துறவியரின் மௌன ஏகாந்த காட்சித்தியான யோக சபையினரின்சாட்சிய வாழ்வு ஒருபுறமும் அருட்தந்தை கென்றி ஜெலாண்ட் அடிகளால் அரசி வரத்தடியாக மாற்றம் பெற்ற இராசமுருக்கடிதந்த முதற்சனிக்கிழமை இரவுத் திருவிழிப்பில் கியோமர் ஆண்டகையின் நள்ளிரவுத் திருப்பலியும் சலோமைத்தாயாரின் உணர்வுபூர்வமான பங்களிப்பும் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் வழிகாட்டலில் பிரசங்கப்பீரங்கிகளான பல சுதேச அமதி குருக்களின் தர்க்கப்பிர சங்கங்களுடன் கூடிய மகா ஞானொடுக்கங்களும் மன மாற்றங்களுடன் உரும்பிராய் தொடக்கம் கொக்கிளாய்வரை பல கிராமங்களில்திறக்கப்பட்டகத்தோலிக்கமறையறிவிப்பு நிலையங்களும் வந்த எதிர்ப்புகளும் அவற்றைக்கையாண்ட விதங்களும் மறுபுறமுமாக வைத்துப்பார்க்கும் போது இவற்றால் பொழியப்பட்ட இறையருள் தாராளம். மருதமடு அன்னையுடன் ஆரம்பிக்கப்பட்டு, புல்லாவெளி, சாட்டி, சின்னமடு, தும்பளை, கச்சதீவு, பாலைதீவு ஈறாக இடம்பெற்ற யாத்திரைகளும் எம் மக்களுக்கு எவ்வளவோ ஆறுதலாக இருந்தன.

அதேவேளை ஆங்கிலேயர் காலம்முதல் நாட்டின் சுதந்திர காலம் வரை மத நிறுவனங்களால் நடத்தப்பட்ட . தனியார் பாடசாலைகளின் சிறப்பான முகாமைத்துவம் காரணமாக யாழ். திருச்சபையில் நல்லொழுக்கக் கட்டுப்பாட்டுடன் கூடிய சிறந்த அர்ப்பணமான, ஆன்மீகத் தலைவர்களை பெற்றோர் பெரியோரை மதிக்கும் வாழ்வு மேலோங்கியிருந்தது.

(தொடரும்...)

அருட்பணி .C.J.அன்ரனிபாலா

# விண்ணக வாழ்வின்

**2ம் ஆண்டு** **8ம் ஆண்டு**





யேமிஸ்
பிரான்சிஸ் சேவியர்
(துரைசிங்கம்)
பிறப்பு - 1933.04.27
இறப்பு - 2015.10.07

பிரான்சிஸ்
சேவியர் லூர்த்தம்மா
(தங்கமணி)
பிறப்பு - 1942.03.27
இறப்பு - 2009.03.27

" இயேசுவோடு இணைந்த நிலையில்
இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார் "
(1தெச 4:14)

எம் வாழ்வின் தியாக தீபங்களே,
அன்பான அம்மா அப்பா!
உலகை நீங்கள் வென்று
ஆண்டுகள் பல கடந்தாலும்
தாலாட்டும் சங்கீதமாய் – நிதம்
உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சோரத்தில் ஒலிக்கும்
ஆண்டவன் மடியில் – நீங்கள்
ஆனந்தமாய் ஆன்ம துயில் கொள்வீர்
உங்கள் விசுவாச வாழ்வை
தொடர்ந்து நாம் வாழ
எமக்காகவும் வேண்டிடுங்கள்

நல்லூர்
யாழ்ப்பாணம்

பிரிவால் துயருறும்
C.A.மோகன்ராஸ்
(ஜக்குலின்)
குடும்பத்தினர்

AD53



# 3ம் நாள் இரங்கற் திருப்பலி

மண்ணில் 21 - 02 - 1956



விண்ணில் 30 - 05 - 2017

## மேரிலூர்ட்ஸ் ஞானப்பிரகாசம்

" சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள் "

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 27.06.2017 செவ்வாய்
பி.ப 5.00 மணிக்கு நாவற்குழி புனித அந்தோனியார் ஆலயத்திலும்,
29.06.2017 வியாழன் காலை 6.00 மணிக்கு யாழ் கோவில் வீதி
அருள் ஆச்சிரமத்திலும் இரங்கற்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

இதனை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக்கொள்ளவும்

புனித அந்தோனியார் கோவிலடி,
கேரதீவு வீதி
நாவற்குழி.

தகவல்
பற்றிமாமலர் நீக்கிலாஸ்
0770 748 328

AD55


## இணக்கத்தின் தூதுவர்களாக...

(1ம் பக்கத் தொடர்ச்சி...)

இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இளைஞர்களும் தன்னிலை எழுச்சியடைந்து போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்த முரண்பாட்டை தீர்க்கும் நோக்கில் யாழ் ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையும், நல்லை ஆதீன முதல்வர் அவர்களும் இணைந்து தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவைசேனாதிராஜா முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இதனால் சுமூகமான நிலைமை ஏற்பட்டு சகலவிதமான சர்ச்சைகளுக்கும் முடிவு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக நம்பிக்கையில்லா பிரேரணை வாபஸ் பெறப்பட்டு இரு அமைச்சர் மீதான தடையுத்தரவுகளும் நீக்கப்பட்டுள்ளன. ஆனால், இரு அமைச்சர் மீதான விசாரணையை தொடருவதென இரு தரப்பும் இணங்கிக் கொண்டனர்.

அதேவேளை ஒரேகட்சிக்குள் இருந்துகொண்டு மோதுப்படுவதை தவிர்க்குமாறும் தமிழர்களின் பிரதான அரசியல் கோரிக்கையான சுயநிர்ணய உரிமையை பெற்றுக் கொள்ளும் வேலைத் திட்டம் மாத்திரமே முதன்மை நோக்கமாக இருக்கவேண்டும் என்ற தொனியிலும் பொதுநிலையினர் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.


## கத்தோலிக்க அச்சகத்தில் மலிவு விலையில் வேதாகமம்

வேதாகம நூல், புதிய ஏற்பாடு (சிறியது, பெரியது) உட்பட வழிபாட்டு நூல்கள் திருப்பலி வாசக நூல்கள் என்பன மலிவு விலையில் புனித வளன் கத்தோலிக்க விற்பனை நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
வேதாகமம் – 550/= புதிய ஏற்பாடு (பெரியது) 300 /= (சிறியது) 175 /=.
இறையியல், உளவியல் நூல்களும் விற்பனைக்கு உண்டு


## பாடசாலை மாணவர்களுக்கிடையிலான ஓவியப்போட்டி முடிவுகள்

கரித்தாஸ் கியூடெக் - யாழ்ப்பாணம் சர்வமத சக வாழ்வு அரங்கம் நடாத்திய "சர்வமத ஒன்றிணைவுடன் சமூக முன்னேற்றத்துக்காக உழைப்போம்" எனும் தலைப்பில் நடைபெற்ற ஓவியப்போட்டி முடிவுகள் :

1ம் இடம் :- ச.நிரோதா, தரம் 5A, யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்
2ம் இடம் :- ட.ஆகாஸ்,தரம் 5A, யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்
3ம் இடம் :- A.அர்கம்,தரம் 4A, மத்தியகல்லூரி

**பாராட்டுப் பெறுவோர்**

1. J.மேரி அமுதரசி - தரம் 5A,யா/நாவாந்துறைறோ.க.வித்தியாலயம்
2. C.அனைக்ஸ் - தரம் 5
3. M.R.F.றில்னா- யா/கதீஜா மகளிர் கல்லூரி,தரம்- 07
4. M.J.M.கூறிபாக் - யா/ஒஸ்மானியான் கல்லூரி,தரம் - 03
5. ஜெ.பொனிபன் - தரம் 5A, யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்
6. A.M.அப்ராத் - யா/ஒஸ்மானியாக் கல்லூரி,தரம் - 04
7. A.ஆதிலா- யா/ஒஸ்மானியாக் கல்லூரி,தரம் - 03
8. J.துவாரகா - யா/வெண்புரவிநகர், தரம் - 06
9. N.திவ்யா - யா/கொட்டடி நமச்சிவாயம் வித்தியாலயம், தரம்- 4
10. Y.கேனுஜா-யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம், தரம் 5

**(மேற்பிரிவு)**

1ம் இடம் :- ஜ்ட்சன் சக்திஜீவன் சிந்துஜன், யா/புனிதபத்திரிசியார் கல்லூரி
2ம் இடம் :- செ.நிலக்சி, வெண்புரவிநகர்.
3ம் இடம் :- க.அஸ்வினி, யா/திருக்குடும்ப கன்னியர் மடம்


# 3ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 28 - 12 - 1931



இறப்பு 21 - 06 - 2014

அமரர்
**திரு.சிங்கராஜர் ஞானப்பிரகாசம்**

காலச் சக்கரத்தில் மூன்று ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும் எம் விழிகளில் நீர்
இன்னும் காயவில்லை
எம் நெஞ்சில் உம் நினைவுகள்
என்றுமே பசுமை
அன்பையும் பாசத்தையும் அளவுக்கதிகமே தந்தாய்,
எமக்கு எக்குறையுமின்றி
எல்லாமாக நின்றாய் ஏங்குகின்றோம் மறுபடியும்
உம்மோடு கூடி வாழ

**உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவர்
இறப்பினும் வாழ்வர்**

1/2 புதுவீதி
கொய்யாத்தோட்டம்
யாழ்ப்பாணம்

AD 56



# 47ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 • 10 • 1962



உதிர்வு 26 • 06 • 1970

செல்வி
**மிரியம் சாமினி**

" நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும் இறைவா
முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக "

சுருவில் குடும்பத்தினர்

AD 50



# 5ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 16 • 11 • 1935



விண்ணில் 24 • 06 • 2012

திருமதி
**மேரிறீற்றா ஆசீர்வாதம்**
(ரஞ்சிதம்)

" நானும் ஆண்டவரின் இல்லத்தில்
நெடுநாள் வாழந்திடுவேன் " (தி.பா.23:6C)

வஞ்சமில்லா உன்முகம் கண்டு
பஞ்சாக பறந்ததுவே ஆண்டுகள் ஐந்து
பிரிவென்னும் துயருக்குள் அம்மா உந்தன்
பாசமதை நாம் தொலைத்துவிட்டோம்
நிலையான வாழ்வை நீவிர் தேடியதால்
நிழல்படத்தில் உம்மை வைத்தே
நிமலன் பாதம் நித்திமாய் இளைப்பாற
நிதமும் நாம் இறைஞ்சுகின்றோம்

மாரீசன் கூடல்
இளவாலை

கணவர், பிள்ளைகள்
மற்றும் உறவுகள்

AD54

# கொழும்புப் பேராயர் மேதகு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் யாழ். வருகையின்போது...

கடந்த 22.06.2017 அன்று இரு நாள் விஜயமாக யாழ். வருகை தந்த கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் மேதகு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரிக்கும், திருமறைக் கலாமன்ற கலைக்கூடத்திற்கும், ஊர்காவற்றுறைப் பங்கிற்கும் விஜயம் செய்திருந்தார். இவ் விஜயத்தின் நிழற்படங்களைக் காணலாம்.





இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜோர்ன் றோஹிட் அவர்கள் கடந்த 14.06.2017 அன்று காலை 10.00 மணிக்கு யாழ். ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களை ஆயர் இல்லத்தில் சந்தித்து வடக்குக் கிழக்கு மக்களின் தற்கால நிலவரங்கள் பற்றிக் கலந்துரையாடினரர்.



இயேசுவின் திருஉடல் திருஇரத்தப் பெருவிழாவை முன்னிட்டு யாழ். மறைமாவட்டத்தில் பல இடங்களில் நற்கருணைப் பவனிகள் இடம்பெற்றன. யாழ். மறைக்கோட்டக் குருக்களின் ஒழுங்கமைப்பில் இரு இடங்களில் நற்கருணைப் பவனிகள் இடம்பெற்றன. முதலாவது பவனி - யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் ஆரம்பித்து யாழ். பேராலயத்தில் யாழ். ஆயரின் இறுதி ஆசீருடன் நிறைவுபெற்றது. இரண்டாவது பவனி - பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆரம்பித்து மணியம்தோட்டம் கர்த்தர் ஆலயத்தில் நிறைவுபெற்றது.

# யாழ். மறைமாவட்டத்திலிருந்து சொமஸ்கன் சபைக்கு புதிய குரு

சொமஸ்கன் சபையினரைச் சேர்ந்த திருத்தொண்டர்களாக பெனடிற் யூட் குயின்ரன் இருதயசாமி (CI) அன்ரன் யோய் மைக்கல் (CI) ஆகியோர் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு யோசவ் பொன்னையா அவர்களால் அருட்பணியாளர்களால் கடந்த 23 யூன் 2017 அன்று திருநிலைப்படுத்தப்பட்டனர்.



திருத்தொண்டர் யூட் குயின்ரன் அவர்கள் யாழ் மறைமாவட்ட சுன்னாகம் தூய அந்தோனியார் ஆலயப் பங்கினைச் சார்ந்த 7வது அருட்பணியாளரும், சொமஸ்கன் துறவற சபையை சார்ந்த, யாழ் மறை மாவட்டத்தின் 1வது அருட்பணியாளரும் ஆவார். இவரது முதற் திருப்பலி எதிர்வரும் ஆடி மாதம் 02ம் திகதி ஞாயிறு தினம் காலை 9.30 மணிக்கு சுன்னாகம் தூய, அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும்.

சொமஸ்கன் துறவற சபையினர் இலங்கையில் முதன் முதல் கண்டியிலும் பின்னர் 2005ம் ஆண்டில் மட்டக்களப்பிலுள்ள தன்னாமுனை தூய சூசையப்பர் ஆலயப் பங்கிலும் சேவை புரிகின்றனர். இவர்களது முதன்மையான பணி கைவிடப்பட்ட அனாதைக் குழந்தைகள் மற்றும் சிறுவர்களைப் பராமரிப்பதாகும். மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் கடந்த பல வருடங்களாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தத்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்காக மட்டக்களப்பில் தமது பணிக்களத்தை நிறுவி சிறப்பாக செயற்பட்டு வருகிறார்கள். அத்துடன் வேலைவாய்ப்பில்லாத இளையோருக்கு தொழிற் பயிற்சி வழங்கி அதன்மூலம் இளையோர் வருமானம் பெற உதவுகிறார்கள்.

இத்துறவறசபையினர் தமது சொந்த முயற்சி உழைப்பு என்பவற்றினூடாக கிடைக்கும் வருமானத்தை சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு செலவிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களால் நடாத்தப்படும் பாரமரிப்பு நிலையம் "மியாமி ஆன்மீக இல்லம்" என அழைக்கப்படுகிறது. புதிய குருக்களின் பணிவாழ்வு சிறக்க பாதுகாவலன் வாழ்த்தி மகிழ்கின்றது



யாழ். மறைமாவட்ட மரியாயின்சேனை உறுப்பினர்கள் ஆயர் தினத்தன்று யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை சந்தித்து வாழ்த்துக்கூறினார்கள். சேனையினரை யாழ். ஆயருடன் படத்தில் காணலாம்.

### 13 ஆம் திருத்தச்சட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி...)

எம் மக்களின் அமைதி வாழ்வுக்காகவும் உழைப்போம் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்

வத்திக்கான் சங்கத்தின் பரிந்துரையில் கத்தோலிக்க பாடசாலைகளின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுவதாகக் கூறிய பேராயர் இன்றைய கத்தோலிக்க பாடசாலைகள் மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என்றும் கூறினார். சென் பற்றிக்ஸ் கல்லூரி மிகச்சிறந்த கல்விமான்கள் பலரையும் சமய அரசியல் தலைவர்களையும் சமூக அக்கறையுடைய பலரையும் உருவாக்கியுள்ளது.

இதையிட்டு பெருமைப்படுவதாகவும் பேராயர் குறிப்பிட்டார். இப்பரிசளிப்பு விழாவானது கல்லூரி முதல்வர் அருட்பணி. ம.ஜெறோ செல்வநாயகம் அடிகள் தலைமையில் நடைபெற்றது. இப்பரிசளிப்பு விழாவின் சிறப்பு விருந்தினராகக் கல்லூரியின் பழைய மாணவன் வைத்திய கலாநிதி ரட்ணசபாபதி கேசவன் கலந்து சிறப்பித்தார்.

### மக்களின் ஆணையை....

(1ம் பக்கத் தொடர்ச்சி...)

மக்கள் நலனுக்காகவே அரசியல் கட்சிகள் உள்ளன என்றும், அரசியல் கட்சிகளுக்காகவும், தனிப்பட்டவர்களுக்காகவும் மக்கள் நலன்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதையும், மக்களின் ஆணையைக் கேலிக்கூத்தாக்க வேண்டாமென்றும், ஊழலற்ற மாகாணசபையை உறுதிப்படுத்த முதல மைச்சர் மாண்புமிகு நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் படியும் எல்லோரையும் கேட்டு நிற்கின்றோம்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2017 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.